சேதங்களுக்கு அதிகபட்சம் 2,500 ரூபாய் வரை நஷ்டஈடு வழங்கப்படுகிறது. ஆனால் அந்தப் பகுதியில் ஏலகிரிப் பகுதியில் யானை தாக்கி மரணம் ஏற்பட்டவருக்கு நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பு நிகழ்வாக விதியைத் தளர்த்தி அங்கே 10 ஆயிரம் ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் மேலும் யானைகள் அதிகமாக நடமாடும் பகுதிகளுக்கும் கிராமங்களுக்கும் இடையில் தகுந்த வேலி அமைக்கவும் நடப்பு நிதி ஆண்டில் யானைக் காப்பக திட்டத்தின் கீழ் 7.50 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, எந்தப் பகுதியில் யானைத் தாக்கி சேதம் ஏற்படுகிறதோ அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து அந்தப் பகுதிகளில் யானைகள் வராமல் இருப்பதற்காக இரும்பு வேலி அமைப்பதற்குரிய அனைத்துப் பணிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணிகள் முடிக்கப்படுகிற தருணத்தில் இப்படிப்பட்ட விளைவுகள், பயங்கள், ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 253. திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

253—

அரசு ரப்பர் தோட்டத்தில் பணிபுரியும் சித்தார் காலனியைச் சேர்ந்தவர்களின் குறைகளை நிவர்த்தி செய்தல்.

* *20242*—திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அரசு ரப்பர் தோட்டத்தில் வேலை பார்க்கும் சித்தார் காலனியைச் சார்ந்த மக்களின் வாரிசுகளுக்கு வேலை மறுக்கப்படுவதையும், அவர்கள் தங்கியுள்ள வீட்டைக் காலி செய்யவும் அக்கழகம் வற்புறுத்தி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறைகளை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

1994 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) அரசு ரப்பர் கழகம் சித்தார் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு மறுவாழ்வு திட்ட அடிப்படையில் மற்றும் விதிகளின் அடிப்படையில் வேலை மற்றும் வீடு வழங்கப்படுகிறது.

(ஆ) எனவே, வினா எழவில்லை.

முற்பகல் 10.40

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிலோன் ரிபேட்ரியேட்ஸ் தங்கி இருக்கின்ற பகுதிகளைப் பற்றித்தான் நான் கேள்வியாகக் கேட்டிருக்கிறேன். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அவர்கள் சிரிமாவோ பண்டாரநாயகா அவர்கள் காலத்தில் அங்கே வந்தவர்கள். நம்முடைய வனத்துறை அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், வாரிசு என்று சொன்னால், அந்த பாஸ்போர்ட்டிலே யாருடைய பெயர் இருக்கிறதோ அவர்களுக்கு மாத்திரம்தான் வேலை கொடுப்போம் என்று சொல்கிறார்கள். பாஸ்போர்ட்டிலே பெயர் இருந்தவர்களுக்கு ஏறத்தாழ வேலை கொடுத்து விட்டார்கள். அவர்களுக்குப் பின்னால் இருக்கிற, பாஸ்போர்ட்டில் பெயர் இல்லாதவர்களுக்கு வேறு வேலை கிடைக்காத காரணத்தால், அவர்களுடைய வாரிசுகளுக்கு, பாஸ் போர்ட்டிலே பெயர் இல்லாதவர்களுக்கு, அதாவது அந்த வாரிசினுடைய வாரிசுகளுக்கு வேலை கேட்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் மறுப்பதாக என்னிடம் சொன்னார்கள். மேலும் இவர்களை மற்ற பகுதிகளிலேயுள்ள தோட்டங்களிலும் வேலைக்கு எடுத்துக்கொள்வதில்லை. ஆகையினால் சிலோன் ரிப்பேட்ரியேட்ஸ்களாக இருக்கின்ற, இந்த காலனியிலே வேலை செய்கின்றவர்களுக்கு, அந்த பாஸ்போர்ட்டிலே இருக்கின்ற பெயர்களுக்கு வேலை கொடுத்து முடிந்தால்கூட, அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுப்பதற்கு அரசு தனியாக ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இலங்கையிலிருந்து இங்கே வந்த தமிழ் மக்களைக் குறித்துத்தான் நானும் சொல்லுகிறேன். இந்த மக்கள், சித்தார், குத்தியால் ஆகிய தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். மேற்படி இரண்டு தோட்டங்களிலும் 285 குடும்பங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். தற்போது இரண்டு தோட்டங்களிலும் இவர்களுக்கு 308 விடுகளில் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். 523 தொழிலாளிகள் பணிபுரிகிறார்கள். தற்போது, இனி பணி வழங்கப்பட வேண்டிய நபர்களின் எண்ணிக்கை 16. அந்த 16 நபர்களுக்கு பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு

இருக்கிறது. இதில் என்ன பிரச்சினை என்று சொன்னால், இலங்கை அகதிகளின் மறுவாழ்வுத் திட்டத்தின் அடிப்படையில், குடும்பத்திலுள்ள ஏதாவது ஒரு தொழிலாளி பணிமூப்பு அடைந்தாலோ, பணி ராஜிநாமா செய்தாலோ அல்லது இறக்க நேரிட்டாலோ, அந்தக் குடும்பத்திலுள்ள அவர்களது குடும்ப அட்டையில் பெயர் உள்ள மற்றொரு நபருக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் அடிப்படையில் வேலை வழங்குவதுதான் இப்போது நடைமுறையில் இருக்கிற சட்டவிதிகள். அந்த அடிப்படையில்தான் இது செய்யப்பட்டு வருகிறது. எனவே, குடும்ப அட்டையில் பெயர் இல்லாத நபர்களுக்கு வேலை கோரும் பட்சத்தில் அவர்களது கோரிக்கைகளை ஏற்று, வேலை வழங்க இயலாமல் போய்விடுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, அங்கேதான் சிக்கலே வருகிறது. அவர்களுடைய பெயர்கள் பாஸ்போர்ட்டிலே இருந்தால்கூட, இவர்களை வேறு தோட்டங்களிலேயும் வேலைக்கு எடுப்பதில்லை. வெளியிலேயிருந்து ஒரு ஆளை நியமித்தால் அவர்களை வேலை செய்ய அனுமதிப்பதும் இல்லை. கழிந்த சீசனிலே ஏறக்குறைய 45 நாட்கள் இந்தத் தோட்டம் ஸ்டிரைக்கில் இருந்தது. பல லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு இதனால் இழப்பு ஏற்பட்டது. காரணம், இங்கேயுள்ள ஒரு வேகன்சியிலே வெளியூர் தோட்டத்திலேயிருந்து ஆளை போட்டார்கள். அது ஒரு பெரிய பிரச்சினையாக ஒன்றரை மாத காலம் அந்தத் தோட்டம் மூடப்பட்டது. இந்தத் தோட்டப் பிரச்சினை எனது தொகுதியிலே ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தினால்தான் இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கிறேன். ஆகவே, தயவுசெய்து இந்த ஒரு தோட்டத்திற்கு மட்டும், சிலோன் ரிபேட்ரியேட்ஸ்-உடைய வாரிசுக்கு நீங்கள் வேலை கொடுத்தால்தான் அந்தப் பிரச்சினை அங்கே தீரும். அதற்காக ஒரு சிறப்பு ஆணை போட்டால்கூட தவறு இல்லையென்று சொல்கிறேன். ஏறக்குறைய அங்கே 8 டிவிஷன்கள் இருக்கின்றன. அங்கே யாரும் கேட்பதில்லை. சிலோனிலிருந்து வந்தவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்களுக்குச் சொந்த இடம் கிடையாது. அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்று சொன்னால், வீட்டை காலி செய்யச் சொல்லுகிறார்கள். வீட்டை காலி செய்தால், அவர்களுக்கு தங்குவதற்கு இடம் இல்லை. அவர்கள் அநாதைகளாக மாறுவார்கள். ஆகவே, தயவுசெய்து இந்த குத்தியால், சித்தார் ஆகிய இரண்டு காலனியிலே இருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்தக் காலனியிலே எலக்ட்ரிசிட்டியே இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. அவர்கள் எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தையே கேட்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளுக்கு டிபரன்ஸ் ஆஃப் ஒப்பினியன் வருவதற்குக் காரணம், மற்ற டிவிஷன்களிலே இந்தப் பிரச்சினை

கிடையாது. இவர்கள் எதற்கெடுத்தாலும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். நம்முடைய ஆட்கள் வேலை செய்யும் தோட்டங்களிலே இந்தப் பிரச்சினை இல்லை. இந்த ஒரு தோட்டத்தில் மின்சார வசதி இல்லை. அங்கே வீட்டுவசதி இல்லாமல் இருக்கிறார்கள். இதையும் கவனத்திலே கொண்டு, இந்த ஒரு தோட்டத்திற்காவது. தயவுசெய்து அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுப்பதற்கு ஒரு சிறப்பு ஆணை போடுவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டையில் பெயர் இல்லாத நபர்கள் வேலை கோரும்பட்சத்தில். இந்த வனத்துறை அல்லது அந்தக் கார்ப்பரேஷன், அவர்களுக்கு வேலை வழங்குவதற்கு இன்றைக்குச் சட்டத்திலே இடம் இல்லை. எனவே, குடும்ப அட்டையில் இருக்கிறவர்களே இதுகாறும் வாரிசுகளாக வேலைகளைப் பெற்று வந்தார்கள். ஆனால், அண்மைக்காலத்தில் இந்தக் குடும்ப அட்டையில் இல்லாதவர்கள்கூட, ஆந்திரா போன்ற பல்வேறு இடங்களிலே இருக்கிற இலங்கை அகதிகள் அங்கே வந்து அவர்களுடைய சொந்தக்காரர்கள் என்று சொல்லி, வேலை கேட்கிற நிலைமை ஏற்படுகிற நேரத்தில்தான் இந்தப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, இன்றைக்கு இருககிற முறையில் எல்லோருக்குமே வேலை வழங்கப்பட்டு, ஒழுங்காகவே வேலை வழங்கப்பட்டு வருவதாகவே அறியப்படுகிறது. அதுபோன்று தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டு வருகிறது. குத்தியால் தோட்டம் அல்லது சித்தார் தோட்டத்திலுள்ள எல்லோருக்குமே வீடு வழங்கப்பட்டு இருக்கிறது. குத்தியால் தோட்டத்தில் 3 குடும்பங்களுக்கு மட்டுமே வீடு வழங்கப்படவில்லை. ஆனால், அவர்களுக்கு வாடகைப்படி வழங்கப்பட்டு வருகிறது. யாரையும் இதுகாறும் வீட்டை காலி செய்யும்படி சொல்லவில்லை. இதுவரை ஒரே ஒருவர் மட்டுமே காலி செய்யப்பட்டு இருக்கிறார். அவரும், பணிமூப்பு அடைந்து, அவருக்கு வாரிசு இல்லாத சூழ்நிலையில் அந்தக் கழகத்தில் அவருடைய வாரிசு வேலை செய்ய முடியாத ஒரு சூழ்நிலையில், விதிகளின்படி வீட்டை காலி செய்யப்பட்டிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பிரச்சினையை நான் தெரிந்து இருக்கிறேன். அப்படி ஏதாவது பிரச்சினை இருக்குமேயானால் அதை நேரடியாகத் தெரிந்து கொண்டு, அந்தப் பகுதியிலே சென்றுகூட, அந்த மக்களைச் சந்தித்து, அந்தப் பிரச்சினையை நேரடியாகத் தெரிந்து, அந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும். பிரச்சினை இருக்குமேயானால் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 254. திருமதி கே. மரியம் உல் ஆசியா. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

254—

தொழிலாளர் நல நிதியிலிருந்து பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம்.

* *17492—திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நல நிதியிலிருந்து பொறியியல் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொன்னார்கள். இந்தத் தொழிலாளர் நல நிதி என்பது அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட ஒரு ஸ்தாபனம் ஆகும். இது அரசு அதிகாரிகளினால் நடத்தப்படுகின்றது. நான் சமீபத்தில் கேள்விப்பட்டேன். இதற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது என்று நான் அறிகிறேன். எனவே, இந்த ஸ்தாபனத்தின் மூலம் தொழிலாளர் நல நிதியிலிருந்து நடத்தப்படுகின்ற பொறியியல் கல்லூரி அந்தத் தொழிலாளர் குடும்பங்களுக்காகவே மாணவர்களை அனுமதி செய்வதில் தவறில்லை என்பதாலும், இந்திய அரசியல் சட்டத்திலே தொழிலாளர்களுக்காக எந்தவொரு நல்ல காரியத்தையும் நடத்துவதற்கு இடம் இருப்பதாலும் உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை இதனைக் கட்டுப்படுத்தாது. இது தனியார் நிறுவனம் அல்ல. ஆகவே, தனியார் கல்வி நிறுவனத்திற்குள்ள விதிமுறைகள், தொழிலாளர் நல நிதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் பொறியியல் கல்லூரிக்குப் பொருந்தாது. ஆகவே, தொழிலாளர் நல நிதியிலிருந்து பொறியியல் கல்லூரி துவங்க வெளியிடப்பட்ட ஆணையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.